சட்டமன்றப் பேரவைக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் புகழுக்குக் களங்கம் விளைவிப்பவர்தான் உண்மையான துரோகி. கொள்கையே இல்லாமல், வாக்குறுதி கொடுக்காமல், கூட்டணி மட்டும் என்ற கொள்கையுடனே உலவிக்கொண்டு இருப்பவர்கள்தான் உண்மையான துரோகிகள் என்று கூறி, எனது தொகுதி, செவந்திப்பட்டி கிராமத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களும் உறுதுணையாக இருந்து செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட செவந்திப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 *பிப்ரவரி* 3] [*பேரவைத் தலைவர்*]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப் பெற்று, வழிமொழியப் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.*